அறிமுகம்

# இயேசுவின் ஆறுதல் வார்த்தைகள்

*மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகிய சுவிசேஷப் புத்தகங்களில் உள்ளடங்காத தகவல்களை யோவான் சுவிசேஷப் புத்தகம் நமக்குத் தருகிறது. ஐந்து அதிகாரங்களில் உள்ள இந்த விபரங்கள் நம்மை மேல்வீட்டில் இருக்கக் காத்துக்கொள்கிறது (அதிகாரங்கள் 13-17). ஒப்பீட்டு சுவிசேஷங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை முதன்மையாக வலியுறுத்துகையில், யோவான் சுவிசேஷமானது, இயேசு தமது மரணம் மற்றும் பரலோகத்திற்குச் செல்லுதல் ஆகியவற்றிற்குத் தமது அப்போஸ்தலர்களைத் தயார் செய்யும் வகையில் நடத்திய உரையாடல்களை வலியுறுத்துகிறது.*

*இயேசு தமது அப்போஸ்தலர்களிடம் பேசுகையில், அவர்கள் அனாதைகளாக தனித்து விடப்பட மாட்டார்கள் என்பதை அவர் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தினார். 14ம் அதிகாரத்தில் அவர், அவர்களுக்காக ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணும்படிக்குத் தாம் செல்ல இருந்தது பற்றிப் பேசி, அவர்கள் அங்கு வர இயலும் என்று கூறினார். அதற்கு இடைப்பட்ட வேளையில் அவர்கள் என்ன கேட்டாலும் தாம் அதைச் செய்வதாகக் கூறினார். அத்துடன் கூடுதலாக, பரிசுத்த ஆவியானவர் தமது சொந்த பிரசன்னம், தமது வெளிப்படுத்துதல் மற்றும் தமது தொடர்செயல் ஆகியவற்றின் மூலமாக அவர்களின் தேற்றரவாளராக இருப்பார். தேற்றரவாளர் அவர்களுக்கு எல்லா விஷயங்களையும் போதிப்பார். பின்பு இயேசு, "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன்" என்று அறிவித்தார் (14:27).*

*15ம் அதிகாரத்தில் அவர் "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" என்று தொடர்ந்து கூறினார் (15:4). அவர் ஒரு திராட்சைச் செடிக்கும் அதன் கிளைகளுக்கும் உள்ள நெருங்கிய உறவைப்பற்றி விவரித்தார். இல்லை, இயேசு தமது அப்போஸ்தலர்களைத் தனித்து இருக்கும்படி விட்டுவிடாதிருந்தார். ஒருவர் மற்றவர்மீது காண்பிக்க வேண்டிய அன்பு பற்றியும் தாம் அவர்களைத் தேர்ந்து கொண்டது எவ்வாறு என்றும் அவர் பேசுகையில், அவர்களுடன் தொடர்ந்து நிலைத்திருக்கும் உறவைப் பற்றி அவர் பேசினார்.*

*16ம் அதிகாரத்தில் அவர் திகைப்புக்குரிய வகையில், "... நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" என்று கூறினார் (16:7). பிற்பாடு அவர்கள் அவரை மீண்டும் காண்பார்கள் என்று அவர்களுக்கு அவர் வாக்குறுதி அளித்தார். இயேசு, "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்" என்று கூறியதைக் கேட்டது அப்போஸ்தலர்களுக்கு எவ்வளவு ஆறுதலாக இருந்திருக்க வேண்டும் (16:23ஆ)!*

*அவர், "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை*

ஜெயித்தேன்" என்று முடித்தார் (16:33). மறு உறுதிப்பாடு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் செய்தியுடன் இயேசு தமது அப்போஸ்தலர்களைத் தேற்றினார்.

---

## இயேசு எவ்வாறு தேற்றப்பட்டார்?

இயேசுவின் வார்த்தைகள் அவரது அப்போஸ்தலர்களுக்கு மாபெரும் தேறுதலைக் கொண்டு வந்தன - ஆனால் மனிதவடிவில் இருந்த நமது கர்த்தர், தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு, இந்தக் கடினமான வேளையில் தமக்கே ஆறுதல் தேவைப்பட்ட நிலையில் இருந்தார். இந்த இருளான வேளையில் இயேசுவை நிலைநிறுத்தி, உறுதிப்படுத்தி மற்றும் தேற்றியது எது என்பதை யோவான் 13-17 அதிகாரங்கள் நமக்குக் காண்பிக்கின்றன.

*அவர் தமது பிதாவுடன் தமக்குள்ள உறவைக் கண்ணோக்கியதன் மூலம் நிலைநிறுத்தப்பட்டார்.* "தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து" (13:3) இந்த வேளைக்குள் கடந்து சென்றார். அவர் குமாரனான தேவனாக இருந்தார். அவர் பிதாவின் பக்கத்தில் இருந்து வந்திருந்தார் மற்றும் அந்த நித்திய இடத்திற்கு அவர் விரைவில் திரும்பிச் செல்ல இருந்தார். யோவான் 17ல் அவரது ஜெபங்கள், அவரது கீழ்ப்படிதலையும் பிதாவுடன் அவருக்குள்ள நெருக்கமான நிலையையும் காண்பித்தன.

*அவர் தமது எதிர்காலத்தைக் கண்ணோக்கியதன் மூலம் பெலத்தைக் கண்டறிந்தார்.* அவர் வேதனையையும் மரணத்தையும் எதிர்கொள்ள வேண்டி இருக்கலாம், ஆனால் அதன் பின்பு அவர் பரலோகத்தில் இருக்கிற பிதாவினிடத்தில் திரும்பிச் செல்ல முடியும் (14:2, 12, 28; 16:10, 28).

*அவர் தம்மைப் பின்பற்றுபவர்களைப் பற்றிச் சிந்தித்ததன் மூலம் தேறுதலைக் கண்டறிந்தார்.* இயேசு தம்மால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களை அன்புகூர்ந்தார்: "தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்" (13:1).

இதைப்போன்றே நமக்கும்கூட, மாபெரும் சோதனைகளின் மத்தியில், பிதாவுடன் நமக்குள்ள உறவையும், தேவனுடைய கிருபையின் மூலமாக நாம் பெறப்போகும் எதிர்காலத்தையும், நமது சரீரப்பிரகாரமான குடும்பத்திற்காகவும் சபை என்ற விரிவாக்கப்படும் குடும்பத்திற்காகவும் நாம் கொண்டிருக்கும் அன்பையும் நினைவுகூருதல் என்பது மாபெரும் ஆறுதலாக இருக்க முடியும்.